அந்த நாட்கள்

Written by சந்திரவதனா
Monday, 07 September 2009 06:27 - Last Updated Friday, 29 January 2010 09:20

பொன்னிலும், பளிங்கிலும் ஜேர்மனி பளபளக்கும் என்ற சிறுவயதிலான மேலைநாடுகளைப் பற்றிய கனவு ஐந்து நாட்களுக்கு முன் மொஸ்கோவில் இருந்து திருப்பி அனுப்பப் பட்ட போது கலைந்து போய் விட்டது. ஏஜென்சியைப் பிழை சொல்லி என்ன பயன். மீண்டுமான முயற்சியில் மீண்டுமாய் பணத்தைக் கொட்டி விட்டு இன்னொரு ஏஜென்சியை நம்புவதுதான் அப்போதைக்குச் செய்யக் கூடிய காரியமாக இருந்தது. பணம் போய் விட்டதையும் விட முதல் தர பயணத்துக்கு காசு கொஞ்சம் குறைகிறது என்ற போது தம்பி செய்து தந்த சங்கிலியை அவசரமாய் ராணிநகை மாளிகையில் விற்ற போதிருந்த கவலை அடிமனதின் ஒரு ஓரத்தில் இன்னும் உரசியது. பொன் போய் விட்டதில் கவலை இல்லை. தம்பியின் அன்பினால் பின்னப்பட்ட ஒன்று போய் விட்டது என்பதில்தான் கவலை. கைமாறிய போது கண்களில் எட்டிப் பார்த்த துளிகளை யாருக்கும் தெரியாமல் சட்டென்று துடைத்து விட்டேன். மனதை அப்படித் துடைத்தெறிய முடிவதில்லைத்தானே.

விமானம் ஃபிராங்ஃபேர்ட்டில்(Frankfurt) தரையிறங்குகிறது என்ற போது அத்தனை சோர்விலும் மனம் படபடத்தது. எல்லாவற்றையும் சரியாகச் சொல்லி சமாளித்துக் கொள்வேனா என்ற பயமும் கூடவே வந்தது. "மூன்று பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு தன்னந்தனியாக விமானம் ஏறப் போகிறாளோ?" என்று முகத்தைச் சுளித்தவர்களும், நாடியைத் தோள்பட்டையில் இடித்தவர்களும் அந்த நேரத்திலும் மனசுக்குள் எட்டிப் பார்த்தார்கள். எனக்கு வேறு வழி தெரியவில்லை. என் பிள்ளைகளைக் காப்பாற்றி விட வேண்டும் என்ற சுயநலம் மற்றைய எல்லாவற்றையும் அடித்துப் போட்டு விட்டிருந்தது. பெற்றவர்களையும், உடன் பிறப்புகளையும், உற்றவர்களையும், விட்டு விட்டு போர் சூழ்ந்த நாட்டில் இருந்து ஓடி வருவதில் உள்ள சரி, பிழைகளையெல்லாம் ஆழமாகச் சிந்தித்து, ஆராய்ந்து கொண்டிருக்க அப்போது அவகாசம் இருக்கவில்லை. அன்றைய பொழுதில் எனக்கு அயோத்தி ஜேர்மனிதான். புறப்பட்டு விட்டேன்.

துவண்டு போயிருந்த மூன்று குழந்தைகளையும் உஷார் படுத்தி விட்டு தலைக்கு மேலிருந்த கதவைத் திறந்து ஹான்ட்லக்கேஜை இழுத்தெடுத்தேன். மூத்தவன் அப்படியே விமான இருக்கையில் தன்னைக் குறுக்கிக் கொண்டு இன்னும் தூக்கக் கலக்கத்தில் இருந்தான். சின்னவனைத் தூக்கிக் கொண்டு ஹான்ட்லக்கேஜையும் இழுத்துக் கொண்டு வரிசையில் நகர மகளும் பின்னால் வந்தாள். சின்னவனையும், லக்கேஜையும் வெளியில் விட்டு விட்டு மீண்டும் வந்து மூத்தவனைக் கூட்டிச் செல்லும் எண்ணத்தில் விமானப் படிகளில் இறங்கி லக்கேஜை வைத்து விட்டு நிமிர்ந்த போது விமானப் பணிப்பெண்களில் ஒருத்தி மூத்தவனை கையில் பிடித்து அணைத்த படி கீழே இறங்கிக் கொண்டிருந்தாள். மிகவும் நன்றியாக இருந்தது.

சில்லென்ற காற்று உடைகளையும் தாண்டி மேனியைத் தீண்டியது. மே மாதம் குளிராது என்றுதான் சொல்லியிருந்தார்கள். ஆனாலும் ஜேர்மனி குளிர்ந்தது. ஃபிராங்போர்ட் விமான நிலையம் பெரிதாக இருந்தது. உள்ளே போய் அகதி அந்தஸ்து கோருவது அத்தனை சுலபமாக இருக்கவில்லை. கேள்விகளால் துளைத்தார்கள். அவர்களது ஜேர்மனிய மொழியில் ஒரு சொல்லேனும் எனக்குத் தெரியவும் இல்லை. புரியவும் இல்லை. பாடசாலையில் படித்த ஆங்கிலம் தான் அப்போது கை கொடுத்தது.

மூன்று குழந்தைகளும் எனது குழந்தைகள்தான் என்பதை அவர்களுக்கு நம்ப வைப்பதே பெரும்பாடாக இருந்தது. அதிசயப் பூச்சிகளைப் பார்ப்பது போல எம்மைப் பார்த்து, ஸ்ரேற்மென்ற் (Statement) எடுத்து, புகைப்படம் எடுத்து சில மணிகளின்

1 / 3

பின் விமான நிலயைத் தின் இன் னமொரு அறயைில் விட் டார் கள் . அந் த அறை எட் டு இரண் டடுக் குக் கட் டில் களால் நிறநை் திருந் தது. அனகேமான கட் டில் களில் பரோர் த் திய படி வறேற் று நாட் டவர் கள் படுத் திருந் தார் கள் . எமக் காகக் கதவு திறக் கப் பட் ட பரோது எழுந் த சத் தத் தில் சிலர் ஆமை பரோலத் தலயைை நீ ட் டிப் பார் த் து விட் டு மீ ண் டும் பரோர் வகைக் குள் முடங் கிக் கொண் டார் கள் .

எனக் கும் மூன் று பிள் ளகைளுக் குமாக ஒரு கட் டில் தரப் பட் டு அரமைணியில் சாப் பாடு வந் தது. சாப் பாடு எதுவும் எனக் கோ பிள் ளகைளுக் கோ பிடிக் கவில் லை. ஆளுக் கொரு அப் பிளை மட் டும் எடுத் துச் சாப் பிட் டோம் .

அது அர் த் தஜாமம் என் று அங் கிருந் த ஒரு ஆப் ஃகானிஸ் தான் பணெ் சொன் னாள் . எங் களபைப் படுத் து விடும் படியும் சொன் னாள் . எங் களால் படுக் க முடியவில் லை. அதனால் வளியிில் பரோனோம் . சந் நிதி, திருக் கதேீ ஸ் வரம் ... பரோன் ற ஆலய மடங் களில் தங் கியிருப் பவர் கள் சுருண் டிருப் பது பரோலப் பலர் விமான நிலயைத் தின் வாங் கில் களிலும் , நிலங் களிலும் சுருண் டு படுத் திருந் தார் கள் . ஏதோ ஒரு விமானம் அன் று பறக் கவில் லயைாம் .

அன் றயைை அந் த இரவை ஜரே் மனியுடன் ஒட் ட வபைப் பது என் பது எனக் கோ, பிள் ளகைளுக் கோ முடியாத காரியமாகவே இருந் தது. இரவு நீ ண் டிருந் தது. உதடுகள் வடிெத் தன. கால் கள் பொருக் குப் பூத் தது பரோல குளிரில் வளிெறின.

அடுத் தநாள் விமான நிலயைத் துக் கு அருகிலயேே உள் ள அகதிகள் முகாமொன் றில் எங் களகைக் கொண் டு பரோய் விட் டார் கள் . அங் கும் பிடித் தமான சாப் பாடுகள் எதுவும் கிடகைக் கவில் லை. தஞ் சம் கோரி வந் த எங் களுக் கு மீ ண் டும் ஒற் றை அப் பிள் தான் தஞ் சம் . ஊரில் சுண் டக் காய் ச் சிய பாலயைே குடிக் கப் பஞ் சிப் படும் என் பிள் ளகைள் அவர் கள் தந் த பச் சபைப் பாலதைத் தொடக் கூட மறுத் து விட் டார் கள் .

இதற் கிடயைில் நான் தொலபைசேியில் என் கணவருக் கு நாம் வந் து சரே் ந் து விட் டததைத் தரிெவிக் க, அவர் ஸ் வபிெஸ் ஹால் நகரிலிருந் து இரண் டாம் நாள் இரவு எம் மிடம் வந் து சரே் ந் தார் . ஸ் வபிெஸ் ஹால் நகரிலிருந் து வறேங் கும் சலெ் ல அவருக் கு அனுமதியில் லை. பிடிபட் டால் , உடனடியாகப் புகவைண் டியில் ஏற் றி ஸ் வபிெஸ் ஹால் நகருக் கே திருப் பி அனுப் பி விடுவார் கள் . அதுமட் டுமல் ல தண் டனயைாக 400ஜரே் மனிய மார் க் குகளகைக் கட் டவும் சொல் வார் கள் . 350 மார் க் சமூகநல உதவிப் பணத் துடன் வாழும் எனது கணவரின் அப் பரோதயைை நிலை அது.

அடுத் தநாள் காலை, - மூன் றாம் நாள் - எங் களுக் கு அகதி அந் தஸ் து கோரியுள் ளார் என் பதற் கான தற் காலிக அகதி அடயைாள அட் டை தந் து, இன் னமொரு அகதி முகாமுக் கு அனுப் புவதற் காக பரேூந் தில் ஏற் றினார் கள் . கூடவே இன் னும் சில தமிழ் ப் பணெ் கள் . எனது கணவரும் அவரபைப் பரோலவே அனுமதியின் றி வந் த இன் னமொரு கணவரும் சயெ் வதறியாது நிற் க, எங் களை ஸ் வல் பாஹ் (Schwalbach) அகதி முகாமுக் கு அனுப் பி விட் டார் கள் . பரேூந் தில் சில மணி நரேங் கள் பயணம் சயெ் ய வணே் டியிருந் தது.

அந் த முகாமில் ஓரளவு தமிழர் கள் இருந் தார் கள் . ஆனால் என் னபைப் பரோல மூன் று பிள் ளகைளுடன் வந் தவர் கள் யாரும் அங் கில் லை. களதைத் துப் பரோன எனதும் , பிள் ளகைளதும் முகங் கள் அவர் களுக் கு எங் கள் மீ து இரக் கத் தை ஏற் படுத் தியிருக் க வணே் டும் . கிட் ட வந் து அன் பாகவும் உதவும் நரோக் குடனும் கததைத் தார் கள் .

அந்த நாட்கள்

Written by சந்திரவதனா
Monday, 07 September 2009 06:27 - Last Updated Friday, 29 January 2010 09:20

எம்மைச் சாப்பிட வரும் படி அழைத்துச் சென்று ஒரு பெரிய ஹோலில் விட்டார்கள். அது கன்ரீனுடன் சேர்ந்த ஹோல். ஹோல் நிறைய பலவித மொழி பேசும் பல விதமான மக்கள் கசா முசா என்று கதைத்தபடி இருந்தார்கள்.

நானும் பிள்ளைகளும் இன்றைக்காவது சாப்பிடுவோம் என்ற நம்பிக்கையோடு காத்திருக்க அந்தத் தமிழர்களே எமக்கான சாப்பாட்டை எடுத்து வந்து தந்து விட்டுப் போனார்கள். ஆவலுடன் சாப்பாட்டுக்காகக் காத்திருந்த எனது மூத்தவனின் முகம் சாப்பாட்டைக் கண்டதும் ஏமாற்றத்தில் துவண்டு போனது. வந்த சாப்பாடு நாம் வாழ்க்கையில் முதல் முதலாகச் சந்திக்கும் பிற்சா(Pizza). சிப்பி சோகியெல்லாம் அதன் மேல் போட்டிருந்தார்கள்.

"இதையெப்பிடிச் சாப்பிடுறது..?" கோபம், ஏமாற்றம், அழுகை எல்லாம் கலந்த கேள்வி அது.

ஏற்கெனவே ´எனது கணவர் எப்படி இங்கே வந்து சேரப் போகின்றார்?` என்ற யோசனையும், கவலையும் எனக்குள். அதை மிஞ்சிய வயிற்றுப் புகைச்சல். என் மகனும் இப்படிக் கேட்க உடனேயே எனக்கு, எங்கள் மேல் தாங்க முடியாத பச்சாத்தாபம் ஏற்பட்டது. ´திரும்பிப் போய் விடுவோம்` என்ற அங்கலாய்ப்பு வந்தது. போய் ´அம்மாவின் கையால் அம்மாவின் சமையலைச் சமையலைச் சாப்பிட வேண்டும்` என்ற அவா எழுந்தது. எல்லாமாய் அழுகையே வந்தது. ´மூன்று நாள் ஜேர்மனிய வாழ்க்கை போதும்` என நினைத்துக் கொண்டேன்.

அந்த நேரம் எனது மகன் என்ன செய்தான் தெரியுமா..? அவர்கள் மெனக்கெட்டு பக்குவமாகத் தயாரித்த பிற்சாவின் மேலே இருந்த எல்லாவற்றையும் ஒரேயடியாகக் கோப்பைக்குள் வழித்துக் கொட்டி விட்டு கீழேயுள்ள ரொட்டித்துண்டைச் சாப்பிடத் தொடங்கினான்.

´அட இவனுக்கு எப்படி இப்படியொரு மூளை வந்தது!` வியந்தேன். மற்றைய மூன்று பிற்சாக்களிலும் இருந்த எல்லாவற்றையும் என் கண்ணீரோடு சேர்த்து வழித்துக் கொட்டி விட்டு ஒன்றுமில்லாத வெறும் ரொட்டியை மற்றப் பிள்ளைகளுக்கும் கொடுத்து சாப்பிடத் தொடங்கினேன்.

சந்திரவதனா
ஜேர்மனி

பிரசுரம் - யுகமாயினி (October 2008)

கருத்துக்கள்

3 / 3